Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதிஞு (1889) ஆனிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஉ] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ஞூ மார்கழி மீ ரு உ வெள்ளிக்கிழமை (20 DEC 1957) [இல-கூஎ]

# தெய்வப் புலவர் காட்டும் இல் வாழ்க்கைப் பண்பு

———:0:———

## அறிந்து வாழுவோர் இன்பமடைதல் திண்ணம்

தெய்வப் புலவர் இல்வாழ்க்கையின் சிறப்புகளை எடுத்துரைக்கத் தொடங்கியவர் முதலில் இல்வாழ்வான் செய்ய வேண்டிய அறத்தை வலியுறுத்தினர். அதன்மேல் இல்லறத்தை ஈடேற்றும் இல்லாளின் இயல்புகளை எடுத்து விளக்கியுள்ளார். அவற்றை இன்று சிந்தனை செய்து அதன்படி வாழ வேண்டியது நம் தமிழ் மங்கையரின் கடனாகும். புலவர் பெருமானின் பொன்மொழிகளை மேற்கொண்டு வாழ்வார்களேயானல் வாழ்க்கையில் இன்பம் காண முடியும் குறள் முதற்பாட்டிலே வாழ்க்கைத் துணைவி எப்படிப்பட்டவளாக விளங்க வேண்டுமென்பதை எடுத்துக்கொண்டார். அஃதாவது மனையறத்திற்குத் தகுந்த நற்குண நற்செய்கைகளையுடையவளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கையை நடத்தும் திறனுடையாளே வாழ்க்கைத் துணைவியாவாளென்றும், இரண்டாவது குறட்பாவிலே மேற் கூறியதையே வற்புறுத்துகின்ருர். ஒருவனது இல்லாளிடத்து மனையறத்திற்கு ஏற்ற நற்குண நற்செய்கைகள் இல்லாமல் இருக்குமேயானல் அந்த இல்வாழ்க்கை எத்தகைய செல்வத்தை யுடையதாகவிருந்த போதிலும் சிறப்படையமாட்டாதென்கிருர். அப்பாடல்கள்,

"மனைத்தக்க மாண்புடைய
ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை"

"மனைமாட்சி யில்லாள்க ணில்லா
யின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்"

மூன்ருவது பாட்டிலே இல்லாளது மாட்சியை விரிக்கிருர். ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கை உள்ளவளாய் இருப்பின் அவனுக்கு உலகத்தில் இல்லாதது ஒன்றும் இல்லையென்றும் அங்ஙனம் இல்லாள் மேற்கூறிய குணங்கள் இல்லாதவளாயின் அவனுக்கு உள்ளபொருள் ஒன்றும் இல்லையென்றும், நான்காம் குறளிலே பெண்ணுக்கு அத்தியாவசியம் வேண்டிய கற்பின் திறன் விளக்கப்பட்டுள்ளது. ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட செல்வம் பிறிதில்லையெனவும் அவ்வில்லாள் கற்பு என்றுசொல்லப்படும் கலங்காக நிலைமையுடைய

ஸ்ரீ சி. கணேசலிங்க ஐயர்

தெல்லிநகர்

ளாக இருக்கவேண்டுமென்றும் கூறியுள்ளார். அவை பின்வருமாறு,

"இல்லதெனில்லவண் மாண்பானு
லுள்ளதெ
னில்லவண் மாணுக் கடை"
"பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்"

ஐந்தாங் குறளிலே கற்புடைய பெண்ணின் ஆற்றல் கூறப்பட்டுள்ளது. பிற தெய்வத்தைத் தொழாது தனது தெய்வமாகிய கணவனையே தொழுது நின்றுதுயிலெழுபவள் பெய்யென்று சொல்ல மழையானது பெய்யுமென்றும், ஆருவது குறளிலே இல்வாழ்க்கையை மேற்கொண்ட பெண்ணானவள் எத்தன்மையளாய் விளங்க வேண்டுமென்பதையும் விளக்குகிருர். கற்பினின்றும் வழுவாது தன்னைக் காத்துத் தன்னைக் கொண்டவனையும் பேணி, இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற் காத்து அத்துடன் மேற்கூறிய நற்குண நற்செய்கைகளையுங் கடைப்பிடிப்பவளே பெண் என்றும் கூறுகிருர். அவற்றைச் சற்று நோக்குவாம்.

"தெய்வந்தொழாஅள் கொழுநற்
றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"
"தற்காத்துத் தற்கொண்டாற்
பேணித் தகைசான்ற
சொற்காத்து சோர்விலாள்
பெண்"

ஏழாவது பாட்டிலே பெண் தன்னைக் காத்துக் கொள்ளும் திறனைக் கூறுகிருர். அஃதாவது மகளிரைத் தலைவர் சிறையாற் காக்குங் காவல் என்ன பயனைச் செய்ய முடியும்? அவர் தமது நிறையாற் காக்குங் காவலே தலையாய காவலென்றும், எட்டாவது பாட்டில் தன்னைக் கொண்டவனைப் பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவர் என்றும் கூறுகிருர். பெண்டிர் தம்மை யெய்திய கணவனை வழிபடுதல் செய்வாராயின் புத்தேளிர் வாழும் உலகின்கண்பெரும் சிறப்புப் பெறுவாரென்பதை வலியுறுத்தியுள்ளார். அக் குறட் பாக்கள்,

"சிறைகாக்குங் காப்பெவன்
செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"
"பெற்ருற் பெறிற்பெறுவர்
பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு மூலகு"

ஒன்பதாவது குறளிலே இல்லாள் தற்கொண்டானது சொற்காத்து நடக்க வேண்டுமென்றும் அங்ஙனம் காவாதவழி அவனுக்குப்பெருமிதம் இல்லையென்றும் கூறுகிருர். எவ்வாறெனின் தன்னை விரும்பிய இல்லாளை இல்லாதார்க்குத் தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர் முன்னே சிங்கவேறுபோலநடக்கும் பெரு

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# தில்லைத் திருநடனக் காட்சிச் சிறப்பு

## திருக்கேதீச்சரத்திற்காணவரும்பேறு

(திருவெம்பாவை ஆரம்பம் 27-12-57)

சிவனடியார் ஒருவர் "சிதம்பரம் போகாமலிருப்பேனே என் சென்மத்தை வீணாகக் கழிப்பேனே" என்று தில்லைச் சிதம்பர நடேசரைக் குறித்துக் கூறுகின்ருர். அதுபோல ஈழத்துச் சைவர்களாகிய

.................................

— செ. கோ. —

.................................

நாங்களும் திருக்கேதீச்சரம் தரிசியாமலிருப்போமா என்று திருக்கேதீச்சர நடேசரைத் தரிசிக்க விரும்பவேண்டும். ஒரு முறையாவது திருவாதிரைத் தினத்தன்று கேதீச்சர நடேச தாண்டவத்தை இரு கண்களாலும் மக்கள் கண்டு களிக்க வேண்டும்.

தற்காலத்தில் இலங்கைச் சிவனடியார்கள் சிதம்பர நடேசரைத் தரிசிக்கச் செல்வதென்ருல் எதிரில் வரும் கஷ்டங்கள் பல. இக் கஷ்டங்களை நீக்கிச் சென்ருலும் நீண்ட நாட்களுக்கு நின்று தரிசனம் செய்ய இயலாது. ஆகையால் சிதம்பர தலத்திற்கு நிகரான கேதீச்சர தலத்திற்குச் சைவமக்கள் செல்ல வேண்டும். அவர்கள் அங்கு தரிசிப்பதற்குப் பெரும் பாக்கியம் பெற்றவர்கள் என்றே சொல்லலாம். மார்கழி மாதம் வரும் திருவாதிரை நாளில் நடுநிசியில் ஆருத்திராதரிசனம் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களுக்குத் தில்லைநடேசர் நடனம் ஆடிக் காட்டியது போல, முன்னெரு காலம் கேதீச்சர நடேசரும் பிருகு முனிவர், பருப்பதமுனிவர், மாலியவான் முதலிய இருஷிகளுக்கு நடனம் ஆடிக் காண்பித்தார். இன்றும் கேதீச்சர நடேசர் நடனம் எங்கள் ஊனக் கண்ணுக்குப் புலப்படாமல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

அதுமட்டா? பெருமானுடைய குமிண் சிரிப்பு ஊனக் கண்ணலும் கண்டு களிக்கலாம். கேதீச்சர தலத்திற்குச்சென்று அங்கு எழுந்தருளி யிருக்கும் நடேசப்பெருமானது திருவதனத்தை நோக்கினல் அது விளங்கும். உடனே எந்த மனக்கவலையும் மாறி மனம் சாந்தமடையும் என்பது திண்ணம்.

27-12-57-ல் ஆரம்பமாகும் திருவெம்பாவை பத்து நாட்களும் விசேட அபிடேகம், பூசை முதலியனவும், சுவாமி இடபாரூடராய் வீதி வலம் வரும் காட்சிகளும் வழமைபோற் சிறப்பாக நடைபெறும். பத்தாம் நாள் நடேசப் பெருமானுக்கு ஆர்த்திரா அபிடேகம் நடைபெற்று அதிகாலையில் பாலாவித் தீர்த்தத்திற்கு சுவாமி எழுந்தருளுவார். அவ்வமயம் அன்பர்கள் எல்லோரும் பலாவித் தீர்த்தம் மருவி நீராடி, மும்மலங்களையும் கழுவிச் சுத்தி செய்து சிவானந்தப் பேறடையவேண்டுமென எம் பெருமானை வழுத்துகின்ருேம்.

# நாவலர்குருபூசைச்சொற்பொழிவுகள்

———0———

## சைவத்தொண்டும் திருக்கேதீச்சரத் திருப்பணியும்

கொழும்புவிவேகானந்த சபையில் நடந்த நாவலர் குருபூசையில் திரு கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் பேசும்போது திருக்கேதீஸ்வர ஆலயம் சிதைந்து கிடந்ததைக் கண்டு உள்ளம் கொதித்து அந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்று நாவலர் பெருமான் அன்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளுக்கிணங்க இன்று நம் சைவ அபிமானிகள் அந்த வேலையைச் செய்ய முன்வந்திருப்பது என்றென்றும் போற்றத் தக்கது"

"குணம்,ஒழுக்கம்சேவை ஆகியவைகளில் நமது நாவலர் பெருமான் சிறந்து விளங்கினர். சைவ சமயம் வளரவேண்டுமென்ற உயரிய நோக்கம் கொண்ட நாவலர்பெருமான் பல சைவப் பாடசாலைகளையும் [illegible] என்று கூறினர்.

'நாவலர் காவலர்' என்ற விஷயம்பற்றி திரு. சிங்காரவேலனர் பேசும்போது 'பிறரும் உயரட்டும்; நாமும் உயர்வோம் என்ற சமரச உள்ளம் படைத்தவர்கள் தான் உண்மையான சமயவாதிகளாக இருக்க முடியும். இந்த மரபிலே வந்தவர்தான் நமது நாவலர். பிற மதங்கள்மீது நாவலர் ஒருபோதும் வெறுப்புக் கொண்டவரல்லர். ஆனல், அதே நேரத்தில் பிற மதங்கள் சைவசமயத்தை நசுக்குவதை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

உலகிலுள்ள சகல மொழிகளும் வாழத்தான்வேண்டும். நமக்கு மொழிப் பற்று இருக்க வேண்டுமே தவிர மொழி வெறி இருக்கக் கூடாது என்று கூறினர். 'தமிழ் நாயகர்' என்ற பொருள்பற்றி திரு. நா. பார்த்தசாரதி அவர்கள் பேசினர்கள். நவாலியூர் திரு. சோ. நடராசா அவர்களும் பேசினர்கள்.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ௵ மார்கழி ௴
௫ ௳ வெள்ளிக்கிழமை


## திக்குத்திசைகாட்டாத கல்வித் திட்டம்!

சென்ற பன்னிரண்டு நாட்களாகக் கல்விப் பொதுத் தராதரத் தேர்வுக்குத் தோற்றிய பல்லாயிரக் கணக்கான மாணக்கர்கள் சித்தியெய்துவதைப் பற்றிச் சிந்திக்கும் சிரமத்துடன் அடுத்தபடியாக என்ன செய்வது என்று திட்டம் இட்டுக்கொள்ள முடியாது அலமர வேண்டியவர்களா யிருக்கின்றார்கள். இந்தச் சஞ்சலமான நிலைமைக்குக் காரணம் இப்பொழுது நடை முறையிலிருக்கின்ற கல்விக் கொள்கையே என்று நாம் துணிந்து கூறுகின்றோம். கல்வி பயிற்றுவிக்கப்படும் இளைஞர்கள் மொழிப் பிணக்கால் எழுந்த முரண்பாட்டினாலும் வாழ்க்கையின் நோக்கங்களுக்கேற்ற வழிவகைகளைக் காட்டும் அறிவுப் பயிற்சி அளிக்கப்படாத குறையினாலும் திக்குத் திசை அறியமுடியாது அல்லற்படுகின்றமையா ற் பெற்றோர்களும் ஒரு பயனும் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாய்த் தடுமாறுவதுடன் பிள்ளைகளின் பிற்கால வாழ்க்கையெவ்வாறமையப்போகின்றதோ என்று கவலைப்பட வேண்டியவர்களுமாகின்றனர்.

பன்னெடுங் காலமாக ஆங்கிலமூலம் கல்வி பயிற்றப்பட்டு வந்த இந் நாட்டிலேதமிழிலாவது சிங்களத்திலாவது உயர்தரக் கல்வியைக் கற்பிப்பது சாத்தியமாகுமா என்ற கேள்விக்குச் சமாதானங் கூறக்கூடிய வகையிலே கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டிய வேளையில் நீதி நியாயமின்றித் தனிச் சிங்களச் சட்டத்தை யியற்றி ஆட்சியாளர்கள் நிலைமையைச் சீர் கெடுத்து விட்டதன் விளைவாக இன்று பல்கலைக் கழகப் படிப்பு ஆங்கிலத்திலேயே தொடர்ந்து இன்னுஞ்சில ஆண்டுகளுக்குநடைபெறுதல் அவசியமானதென்று கற்றறிந்தவர்களும் அநுபவம் வாய்ந்த அரசியற்றலைவர்களும் எண்ணுகின்றார்கள். கண்டி நகரத்திலே நடந்த இலங்கை இந்திய பல்கலைக் கழக மாநாட்டிற் கலந்துரையாடிய பேராசிரியர் திரு. V. S. கிருஷ்ண அவர்கள் தாய்மொழிமூலம் கல்வி கற்பிப்பது இவ்விரு நாடுகளிலும் உடனடியாகச் செய்தல் முடியாதென்றும் விஞ்ஞானக் கல்விக்குகந்ததாயிருக்கும் ஆங்கிலம் போல, இங்குள்ள தாய் மொழிகளும் சொற்பெருக்கம் அடையும் வரைக்கும் ஆங்கிலத்தில் அக்கல்வி பயிற்றப்படுதல் அத்தியாவசியகமென்றுங் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அது அவ்வளவில் இருக்க, இப்பொழுது பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பிற் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றவர்கள் எம்மொழியிலே கல்வி பயிற்றப்படவிருக்கின்றார்கள் என்ற முடிபைப்பள்ளிக்கூடப் பொறுப்புடைய ஆசிரியர்களும் திட்ட வட்டமாகச் சொல்ல முடியா திருக்கின்றார்கள். வரலாறு குடியியல் முதலிய பாடங்களைக் கூடத் தாய் மொழியிற் கற்பிக்கக்கூடிய நிலைமை இன்னும் உண்டாகவில்லை என்று பலர் கருதுகின்றார்கள். இவ்விதமாகத் திக்குத் திசை அறிய முடியாது அல்லற்படுவதனால் நாட்டின் வளர்ச்சியே பாதிக்கப்படுகின்றதென்பதையாவது உணர்ந்து கல்வி அமைச்சர் தனிச் சிங்களச்சட்டத்தை ஒருபுற மொதுக்கி விட்டு ஆங்கிலத்தின் மூலம் உயர்தரக் கல்விப் பயிற்சி நடைபெறுவதற்கு [illegible] களைச் செய்வதே [illegible] வழியாகும்.

# கொழும்பு நகரசபைக் கலைப்பு

உள்நாட்டு அரசாங்கமந்திரியின் ஆலோசனைப்படி கொழும்பு நகர சபையைத் தேசாதிபதி அவர்கள் கலைத்தமை, அரசியல் முதலியவை சம்பந்தமான பல விசேட கொள்கைகள் பற்றிய வினக்களை எழுப்புகின்றது. இது கொழும்பு மக்களால் மாத்திரமன்றி இலங்கை மக்கள் யாவராலும் ஆழ்ந்து ஆராயப்படவேண்டிய கருமமாகும். கொழும்பை மாத்திரமன்றி இலங்கை முழுதையுமே தாக்கும் விஷயமாய் இது இருக்கின்றது.

கொழும்பு நகரசபை 1947-ம் ஆண்டின் 29-ம் இலக்கச் சட்டப்படி நிலை பெறுவதாகும். இத்தொடர்பிற் சில அதிகாரங்கள் தேசாதிபதிக்கு உண்டு. ஆனல் அந்த அதிகாரங்கள் இப்பொழுது சபை கலைக்கப்பட்ட தொடர்பிற் சரியாகக் கையாளப்பட்டனவா அல்லவா என்பது மற்றொரு விஷயம். இதிற் சம்பந்தப்பட்ட விஷயங்கள் சட்ட முறைப்படி ஆராயப்படலாம்.

இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, அமெரிக்கா, இந்தியா, சுவீடின், நோர்வே போன்ற சனநாயக நாடுகளில், உள்நாட்டு அரசாங்க சபைகள் பற்றிய அதிகாரம் இங்கிருப்பதுபோல் மத்திய அரசாங்கத்துக்குள தா என்பதும் இத்தொடர்பில் ஆராயத்தக்க தொன்றும். அந்நாடுகளின் சட்ட முறைகள் இந்நாட்டில் எடுத்தாளத்தக்கவையா அல்லவா என்பது மற்றொரு விஷயம்.

அரசாங்கத்தின் செயலை ஆதரிக்கும் நியாயங்களைக் காட்டியும் அதை எதிர்க்கும் நகரசபையின் நியாயங்களைக் காட்டியும் அதிகார பூர்வமான அறிக்கைகள் வெளியிடுதல் இத்தொடர்பிற் சம்பந்தப்பட்ட கொள்கைகளை மக்கள் விளங்குதற்கு மிகவும் உதவக்கூடியவையாகும். பகிரங்கவாதங்கள் நடத்துவதும் தகுதி வாய்ந்தவர்கள் பத்திரிகைகளில் விளக்கங்கள் எழுதுவதும் இத்தொடர்பில் உண்மை அறிவதற்கு மக்களுக்குதவும்.

இத்தொடர்பிலும் இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டு நிலைமைகளின் தொடர்பிலுமுள்ள எல்லாக் கருத்துக்களினுலு முண்டாகக்கூடிய நீதியான சமநோக்கு மக்களுக்கு உண்டாகக்கூடிய காலம் வரையில் பாராளுமன்றத்தில் இவ் விஷயம்பற்றி வாதிப்பதைப் பின்போடுதல் நன்று. சட்ட முறைப்படியமைந்த அசைவற்ற சமாதானமான அரசாங்கம் நிலவுதல் நனிமிக முக்கியமானதாகும். சமாதான முறையிற் சுதந்திரம்பெற்ற இந்நாட்டின் நலனுக்காக அசைவுண்டாக்குவதும் ஒழுங்கீனமுண்டாக்குவதும் சட்ட விரோதமானதுமாகிய செயல் அரசாங்கம் செய்வதோ ஓர் அரசியற் கட்சி செய்வதோ விலக்கப்படுகின்றது. இத்தொடர்பில் வேண்டியவற்றை அறியும் வரையில் எந்த ஒரு தீர்மானத்தையும் செய்யாது மக்கள் அமைதியாயிருத்தல் விரும்பத்தக்கதாகும். இந்நாட்டு மக்களின் அரசியல் அனுபவக் குறைவு, சாதி, சமயம், மொழி, பொருளாதாரம் என்பவை பற்றிய வேறுபாடுகள், உலக கருமங்களின் தளப்பமான நிலைமை ஆகிய எல்லாம் கொழும்பு நகரசபைக் கருமத் தொடர்

தொடர்ச்சி 5ம் பக்கம்

### தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார்

நீர்வேலி சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல் நிலையத்தில் கார்த்திகை மாதம் 29-ந் திகதி சனிக்கிழமை (14-12-57) திருவண்ணமலை ஆதீனத்து மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார்) அவர்களின் திருவுருவப்படம் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. உயர்திரு. க. வடிவேல்சாமி அவர்களும், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்களும் சொற்பொழிவுகள் ஆற்றினர்கள்.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 22—12—57 —— 29—12—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. இந்தவாரம் முழுதும் நீர் கவனமாயிருக்க வேண்டும். தேகசுகமும் நல்லாயிருக்கமாட்டாது. பிதாவழி இனத்தவர் உமக்கு அதிகதுன்பத்தை உண்டாக்குவர். பணத்துறையில் நல்ல வாரம்.

**இடபராசி கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

ஞாயிறும் திங்கள் காலையும் உம்மை இடைஞ்சல்களுக்குள்ளாக்கும் குடும்பக் குழப்பங்களுக்கும் இடமுண்டு. உம்முடைய நண்பர் உமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வார்கள், சுகவீனங்களுக்கும் இடமுண்டு தொந்தரவுகளிலிருந்து நீங்கவேண்டுமானல் கோபத்தை அடக்குக.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

திங்கள் செவ்வாய் புதன் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கமாட்டா. பின் அரைவாரம் நல்லபலனைத்தரும், எதிர்ப்பு நீங்கிவிடும்.

**கடகராசி புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

எந்த ஒரு விசேட தீர்மானமும் இந்தவாரம் நீர் செய்யமுடியாமலிருப்பீர். உம்முடைய மனம் அமைதியாயிருக்கமாட்டாது. வயிற்றுக் கோளாறுகளுக்கும் இடமுண்டு, புதன் பிற்பகல் வியாழம் வெள்ளி கமனமாய்க் கழிக்கவேண்டும். வாரத்தின் கடைசி நான் நல்லபுதினங்களைத் தரும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.**

நண்பர்களுடனும் இனத்தவர்களுடனும் சண்டைகளுக்கிடமுண்டு. சுகவீனங்களுக்கும் இடமுண்டு. அபாயங்கள்பற்றி எச்சரிக்கையா யிருக்கவும். பெண்களின் நண்பர் உமக்குச் சிறிது கோபமுண்டாக்குவர் வாரத்தின் கடைசிநாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

பணத்துறையில் நல்லவாரம். உம்முடைய முயற்சிகளை மிகஇலகுவாகநீர் ஒழுங்குபண்ணக் கூடியதாயிருக்கும், சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர்.


ஆங்கில, தமிழ், இந்துசாதன சந்தாதாரர்களுக்கு

**ஒரு அரிய சந்தர்ப்பம்**

இந்த வாரபலன் கணிக்கும் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்கள் எங்கள் சந்தாதாரர்களுக்கு மட்டும் குறைத்த விகிதமான ரூபா மூன்றுக்கு கிரகநிலை, நவாம்சம், மகா தெசை விபரம் அடங்கிய குறிப்புடன் 1958-ம் ஆண்டுக்கு உள்ள வருஷ பலனை சித்திரவாரியாக எழுதி அனுப்புவார். இந்தவருஷம் டிசெம்பர் 31-ந் உ மட்டுமே இக் குறைந்த விகிதம் விருபபியவர்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு மூன்று ரூபாவுடன் பிறந்தவருஷம், மாதம், திகதி, நேரம், பெயர், பிறந்த இடம் என்னும் விபரத்துடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும். பிறந்த ஊர் இலங்கைக்கு வெளிநாடாயின் இன்னும் ஒருரூபா கூட அனுப்பவேண்டும். தயவுசெய்து போஸ்டல் ஆடர்களை நாச்சிமார் கோவிலடி தபாற்கந்தோரில் பெறக்கூடியதாக அனுப்பும்.

(Postal orders to be made Payable at Nachimar kovilady Post office.

MANAGER

S. Radhakrishnan
"Sripaty"
Nachimar Covil Rd
Vannnarponnai East Jaffna.


உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

பணத்துறையில் நல்லவாரம். உம்முடைய சொந்தச் சிக்கல்கள் நீக்கப்படும். ஆனல் சண்டை தொடுக்க நீர் முந்துவீர். சுகவீனங்களுக்கிடமுண்டு. கண்நோய்கள்பற்றிக் கவனமாயிருக்கவும்.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

மனச்சமாதான மிருக்கமாட்டாது. புதுச் சிக்கல்கள் உண்டாகும். நண்பர்களுடன் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு, ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

ஒரு நல்லவாரம், உம்முடைய எல்லா முயற்சிகளிலும் நீர் சித்தியடையக்கூடியதாயிருக்கும். நண்பர் அதிகஉதவியா யிருப்பர். சமூக கித்திக்கும் இடமுண்டு, ஆனல் தேகசுகம் தொடர்ந்து சிறிது காலத்துக்குச் சிக்கலாயே யிருக்கும்,

**மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

ஒரு நல்லவாரம், நண்பர்மூலம் நீர் அதிகலாப மடைவீர். ஆரம்ப இடைஞ்சல்கள் ஏற்பட்ட போதிலும் புதுமுயற்சிகள் நல்ல பலனைத் தரும், சமூகத்துறையில் ஓர் நல்லவாரம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

ஒரு நல்லவாரம் நீர் எல்லா இடைஞ்சல்களிலுமிருந்து நீங்கக்கூடியதாயிருக்கும், சமூகசித்தியும் புகழும் நிச்சயம். சில புதுமுயற்சிகளை நீர் அணிமையில்தொடங்க வேண்டிவரக் கூடும். பணத்துறையிற் சித்தியும் நிச்சயம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

பிதாவழி இனத்தவர் உம்முடைய துன்பங்களுட் பலவற்றுக்கு இந்தவாரம் காரணராயிருப்பர். இரகசியப் பகைவரைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். பணநிலைமைகள் திருந்துதல் நிச்சயம் ஆனல் நீர் அதிகம் மிச்சம் பண்ணமாட்டீர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமூக வாழ்க்கை

—————:0:—————

## திருக்குறட் சிறப்பு

உலகிற் பிறந்த மாத்திரத்தே தாய், தந்தை, சுற்றத்தார், உடன் பிறந்தார் என உரிமை பாராட்டுந் தொடர்புகள் ஏற்படுகின்றன. சில ஆண்டுகள் கழிய ஆசிரியன், நண்பன், அரசன் என்றின்னோரன்ன தொடர்புகளும் மனைவி, மக்கள், அயலார் கிராமத்தார் என்றித்தொடக்கத்த தொடர்புகளும் ஏற்படுகின்றன. இத்தொடர்புகளால் அமைந்தது உலக வாழ்க்கை. மக்களாயினருக்கு இவை இன்றியமையாது வேண்டப்படுவனவேயாம்.

உலகவாழ்க்கையிலுள்ள தொடர்புகளனைத்திலும் மிக நெருங்கிய தொடர்பு நாயகன், நாயகி என்னும் இருவர்க்கிடையே அந்நியோன்னியமாக அமைந்து கிடந்த அன்பின்றொடர்பு ஆகவே இஃது ஏனையவற்றினும் பார்க்க மிக நெருங்கிய தொடர்பு; மூவகைத் தொடர்புகளுள்முதல்வகையிது. இல்லற நடாத்தும் நாயகனும் நாயகியும் ஒரு சாராக இவர்க்கும் மைந்தர், சுற்றத்தார், குரவர், விருந்தினர்,ஏவலாளர் என்றின்னோருக்குமிடையில் ஏற்பட்ட தொடர்பு இரண்டாவது வகையாகும். இனி நகர மக்களுக்கும் அரசனுக்குமிடையிலேற்பட்ட தொடர்பும், பிற தொடர்பில்லார் இருவருக்கிடையே அரசியன் முறை, பொருள் செயல்வகை என்னும் இவற்றால் ஏற்பட்ட தொடர்பும் மூன்றாவது வகையினுட்படுவன. அன்பின் றொடர்பு சுற்றத் தொடர்பு, (அரசியற்) பொருட்பாற்றொடர்பு என யாம் வகுத்துக் கொண்ட மூவகையினுள்ளே எல்லாத் தொடர்பும் அடங்குவன. இவற்றையே முதுதமிழ்ப்புலவர் காமத்துப் பால், அறத்துப் பால் இல்லறவியல்) பொருட் பால் என முப்பாலாக வகுத்துக் கூறினர். இனிச் சுற்றத் தொடர்பினீங்கி நின்ற தவவொழுக்கத்தினருக்குத் துலவறங் கூறப்பட்டது. இதுவும் அறத்துப் பாலினுள் அடங்கும். ஆகவே முப்பாலுரைக்கும் நூல் உலக வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் நீர்மையதாய் ஏனைய நூல்களினுந் தலை சிறந்து நின்றது.

உலக வாழ்க்கை அன்பின்றொடர்பு, சுற்றத்தொடர்பு,பொருட்பாற்றொடர்பு என மூவகைத் தொடர்பினலமைந்தது என முன்னமே காட்டினும். ஆராய்ந்து நோக்குவோமாயின் இவற்றின் வேறாக இன்ப துன்பங்கள் ஏற்படாவென்பதும், அங்ஙனமாதலின் இவையே இருவினைக்கும் இம்மை மறுமைச் சுகதுக்கங்களுக்கும் ஆதாரமாய் நின்றனவென்பதும் தெளிவாகப் புலப்படுவனவாம். மூவகைத்தாகிய இத்தொடர்புகளின் இயல்பினை நன்கறிந்து ஒழுகுவோர் துன்பத்தினீங்கி இன்பத்தைப் பெறுவர். பொருள் மிகப் படைத்தாரேனும் கல்வியறிவு உடையாரேனும் வாழ்க்கையின் இரகசியத்தை அறியாதிருப்பரேல் அவர் வாழ்க்கை செம்மையற்றுத் துன்பத்தை வருவிக்கும் என்பது வெளிப்படை உதாரணமாகப் பெரும்பொருள் படைத்த சீமானொருவர்பல துறைகளிலும் வல்லவராயிருந்தும் தம் மனைவியோடு ஒத்து வாழுஞ் சத்தியற்றவர் என்று வைத்துக் கொள்ளுவோம். விடியல் முதல் மாலைப் பொழுது வரையும் மனைவியொடு சீறிச் சினந்து கொண்டிருப்பாராயின் அவருக்கு மன ஆறுதலுண்டாகுமோ? உண்டாகாது. அண்டை வீட்டிற் கூலிப் பிழைப்புச் செய்துகொண்டு மனைவியோடு சந்தோஷமாக வாழும் வறியவனுடைய செம்மை இச் செல்வந்தருடைய செம்மையினும் பன் மடங்கதிகமானதே. அவனுக்கு மன ஆறுதலுண்டு, அகமகிழ்வுஉண்டு. வேறு சிலர் பெருஞ் செல்வம் படைத்திருந்தும் சுற்றத்தாரோடு ஒதது வாழும் மார்க்கத்தையறியாமையால் ஈகை, அருள் முதலிய கற்குணங்கள் அடையப் பெறாதாராய்ப் பேராசை பொறாமை யென்னுந் தீக்குணங்கள்பற்றிய லைப்ப,மன ஆறுதலற்றுச் சுகமிழந்து வருந்துகிறார்கள். பெற்றபிள்ளைகளைவளர்க்கு முறை தெரியாமையால் சீர் கெட்ட கீழ்மக்களோடு நட்புப் பூணும்படி விட்டுப் பிற்காலத்தில் தமது பிள்ளைகள் சொற் கேளாது நடக்கிறார்களேயென மனம் வருந்தித் துன்புறுகின்ற பெற்றார் எத்தனையோ பலர். இங்ஙனம் உலக நடையைக் கூர்ந்து ஆராய்ந்து பார்ப்போமாயின் வாழ்க்கையின் மருமத்தை யுணர்ந்தோர் அகமகிழ்வும் மன ஆறுதலுமுடையவராய் இன்புற்றிருப்பதையும் அதனை யுணராதோர் பொருள், செல்வம், கல்வி யென்னுமிவற்றைப் பெற்றிருந்தும் துன்புற்று நலிவதையுங் கண்கூடாகக் காணுவோம்.

ஆதலினல் தமது வாழ்நாளைச் செம்மையாகக் கழிக்க வேண்டுமென்னும் விருப்பினையுடையோர் மூவகைப்பட்டு நின்ற தொடர்புகளின் இயல்பையாராய்ந்தறிந்து முரண் கொள்ளாது ஒழுக வேண்டுமென்பது முடிவாகின்றது. உறக்கம், இளமை, நோய் என்னும் இவற்றிற் கழிகிறநாள்போக எஞ்சியிருக் வாழ் நாளோ மிகச்சில. அங்ஙனமாதலின் இணக்கமறிந் திணங்காது அவமே முரண்பட்டு நின்று வாழ்நாளை வீணுக்குவது எவ்வளவு பேதைமை. வாழ்க்கையின் மருமத்தை யறிந்தவரே இம்மையினும் மறுமையினுஞ் செம்மையுற்றிருப்பாரென்பதைப் பன்முறை வற்புறுத்திக் கூறுவோம். தம் மனப்பாங்குக்கு நடப்போமெனக் கட்டறுந்த மாடுபோல் இலக்கின்றி நெறி தவறித் திரிபவர்கள் துன்பத்தையடைதலியல்பே சமவாய வாழ்க்கை யமைந்திருக்கும் மரபினைக் கூர்ந்தாராய்வோமாயின் அது ஒரு கட்டுக் கோப்பாகவிருக்கிறதென்பதையும் நிலையினின்றோர் இன்பமடைவாரென்பதையும் நிலை தவறினோர் துன்பமுறுவாரென்பதையும் நன்குஉணர்ந்துகொள்வோம்.

மூவகைப்பட்ட தொடர்புகளின் தன்மை, இயல்பு, மரபு என்னும் இவற்றைத் திருவள்ளுவ நாயனர் அருளிச் செய்த திருக்குறள் என்னும் தலையாய நூல் சிறப்புற விரித்துக் கூறும். ஏனைய நீதி நூல்கள் சிற்சில பாகங்களைக் கூறுவன. வட மொழியிலுள்ள தர்ம சாஸ்திர அர்த்தசாஸ்திரங்களும் கல்ப சூத்திரமாதியனவும் பெருகக் கூறுவன. மூவகைத் தொடர்பினுள்ளும் முதற் கண்ணின்றது அன்பின் றொடர்பு. இது செம்மையுற்ற வழியே ஏனைய தொடர்புகளுஞ் செம்மையுறும். ஆதலினல் நாயகனுக்கும் நாயகிக்கும் இடையிலுள்ள அன்பின் றொடர்பினியல்பை நன்கறிந்திருப்பது இல்லற நடாத்துதற்கு இன்றியமையாததொன்றும். இதுபற்றிப்போலும் தண்டமிழ்ப் பெரும் புலவர்கள் அகத்திணையின்பாற்கிடந்த இன்பத்துறையைப் பெருக விரித்துக் கூறினர்கள். இத்தொடர்பு அன்பிற்பாற்பட்டது. அன்பே கருவியாக நிகழ்வது. நாயகன் நாயகிபாற் பேரன்பு பாராட்ட வேண்டும். அங்ஙனமே நாயகியும் நாயகன் பால் நிறைந்த அன்பு உடையவளாயிருத்தல் வேண்டும். "எம்மிறைவன் எம்பெருமாட்டியைப்பாகத்தில் வைத்துக்கொண்டான் மணி வண்ணனுகிய கண்ணன் திருமகளை மார்பில் வைத்துக் கொண்டான், பிரமதேவன் கலைமகளை நாவிலிருத்தினன். யான் என் இன்னியிர்க்குயிராகிய தலைவியைக் கண்ணினுள் வைத்துக் காப்பாற்ற விழைந்தேன். ஆதலினல் கருமணியினின்று ஆடுகின்ற பாவையே யகன்றுவிடு, யான் விரும்புகின்ற திரு நுத லுடையாளுக்குத் தக்கவிடம் பிறிதொன்றிலது" என்று கூறிய நாயகனுடைய அன்பு எத்தனைச் சிறப்புடையது. இத்தகைய அன்பு நாயகனுடைய உள்ளத்துத் தோன்றுமாயின் நாயகியினுடைய உள்ளத்தும் அது பொலிவுறும்என்பதற்கு ஐயமில்லை சிலர் தம் மனைவியரைப் பயமுறுத்தியாள முயல்கின்றார்கள்; இது பேதைமைப் பாலதாகும். அன்பினல் அச்சத்தை விளைத்தல் இயலும். ஏனெனில் உண்மையன்பு உள்ளவிடத்து வேண்டிய அளவு அச்சமுந் தோன்றும். ஆனல் அச்சத்தினல் அன்பை விளைவிக்க முயலுதல் மணல் கொண்டு கயிறு திரிக்க முயல்வதையொக்கும். அன்புடையாரிருவர் மன நிறைவோடு வாழுகின்ற இல்லத்திற் சாந்தம்,பொறுமை தண்ணளி முதலிய நற்குணங்கள் பல தோன்றுதலும் செம்மையும் சீரும் வந்தெய்துதலும் இயல்பேயாம். காரணமின்றி வெகுளுதல், வன்மஞ் சாதித்தல் என்னுமிவை உள்ளத்துட் புகுந்தாற் பிரிவினை யேற்படும். ஆதலால் அன்பின் வழுவாது நின்ற நாயகனும் நாயகியும் பொறுமையுடனும் ஆதரவுடனும் சீவியம் நடத்த வேண்டும்.

இல்லத்திலுதித்தெழுந்த அன்பின் சுடர் யாண்டும் பரந்து மைந்தர், சுற்றத்தார், உள்ளூரார் தேயத்தார், உலகத்தார் என்றின்னோர்பால் விரிந்து விரிந்து செல்ல வேண்டும். அன்பானது காலதேச எல்லையிலுட்பட்டதறு; ஆதலால் அது இன்னார்க்குரியது, இன்னார்க்குரிய தல்லாதது என்பதோர் வரையறையில்லை. "யாது மூரே யாவருங் கேளிர்" என்று கூறிய முது தமிழ்ப் புலவர் எல்லா வூரையுந் தம் மூராகவும் எல்லா மக்களையுந் தமது சுற்றத்தாராகவுங் கொண்டார்.. ஆதலால் சுற்றத் தொடர்பு இல்லத்திலே தோன்றி முதற்கண் நெருங்கிய தொடர்புடையார்பாற் செல்லுவதாமாயினும் மனம் அகற்சியடைய

தொடர்ச்சி 4-ம் பக்கம்


சைவ பரிபாலன சபையார்
வெளியிட்ட

**பாலபாடம் 1-8**

•••○○○•••

வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டன

[பாடநூற் பிரசுரஆலோசனைச்சபையினரால் 31-10-1957இல் வெளியிடப்பட்ட பாடப்புத்தக உபதொகுதி - 5 -பக்கம் 37]

| | | |
|---|---|---|
| முதற் பாலபாடம் | விலை சதம் | 40 |
| இரண்டாம் பாலபாடம் | ,, | 60 |
| மூன்றும் பாலபாடம் | ,, | 75 |
| நான்காம் பாலபாடம் | ,, | 95 |
| ஐந்தாம் பாலபாடம் | ,, | 1-00 |
| ஆரும் பாலபாடம் | ,, | 1-10 |
| ஏழாம் பாலபாடம் | ,, | 1-15 |
| எட்டாம் பாலபாடம் | ,, | 1-25 |

பாலர் கீழ்ப்பிரிவுக்குரிய

**சிறுபிள்ளைப்பாடம்**

புதிய 1958 - ஆம் ஆண்டுப் பதிப்பு
பல படங்கள் கொண்டது.
விலை சதம் 40.



சைவபரிபாலனசபை வெளியீடு

கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்

**தேர்வுக்குரிய நூல்கள்**

[ G. C. E. ]

இலக்கியம்

கும்பகருணன் வதைப்படலம் (செய்யுள் 1—170)
உரையாசிரியர் : வித்துவான், பண்டிதர் சைவப்புலவர் க. வேந்தனர் அவர்கள். விளக்கவுரை, தேர்வுவினக்கள் முதலியவற்றுடன். விலை ரூபா 3–00.

சைவ சமயம்

பதிப்பாசிரியர்: பண்டிதர் ம, வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

திருவருட்பயன் விளக்கவுரையுடன்
உரை ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் B. A.
விலை சதம் — 75.

திருக்குறள் மூலமும் உரையும் (25 — 34)
ஆங்கில மொழிபெயர்ப்புடன் விலை சதம்—75

சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் ,, ,, —75

தேவார திருவாசகத்திரட்டு உரையுடன் விலை சதம்—65


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முது பெரு நூல்களில் முக்கணன் முதன்மை

உலகில் பலவேறு தெய்வங்கள் பலப்பல வடிவில் திகழ்ந்துகொண்டு இருந்தாலும் அவற்றுள் முதன்மை ஒன்றற்கே உரியதாகும். அதுவே முழுமுதற் பரம்பொருள் என்றும், பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம் என்றும் அனுபவ ஞானிகளால் உணர்த்தப்பட்டு வரும் உண்மையாகும். இதை உட்கொண்டே திருமூலர், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று கூறியருளினர். அந்த ஒருவன் யாவன்? என்ற வினா உடனே எழும் அன்றோ? அவன் சிவபரஞ்சுடராகிய முக்கண் மூர்த்தி ஆவான். இந்த உண்மையினைப் பாலறுவாயராம் ஆளுடைப்பிள்ளையார்,

மூவரும் ஆகி இருவரும்
ஆகி முதல்வனும்
ஆய்நின்ற மூர்த்தி
பாவங்கள்தீர்தர நல்வினை
நல்கிப் பல்கணம்
நின்று பணியச்
சாவம தாகிய மால்வரை
கொண்டு தண்மதில்
மூன்றும் எரித்த
தேவர்கள் தேவர்
எம்பெருமானர்தீதில்
பெருந்துறையாரே

என்றருளிப் போந்தார்.

உலகில் உள்ள எல்லாச் சமயத்தவரும் நாட்டவரும் தத்தம் வழிபடு கடவுளாகக் கொண்டு அவர் அவர்கள் உகந்த முறையில் வணங்கி வந்தாலும், அவ்வாறு வணங்கப்பட்டுவரும் தெய்வங்கள் ஒவ்வொன்றிலும் முக்கண் மூர்த்தியின் மூர்த்தமே ஊடுருவியுள்ளது என்பது முடிந்த முடிபாகும் (சித்தாந்தமாம்). இதனைச் சிவஞான சித்தியார்.

"யாதொரு தெய்வங்
கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம்
வருவார்"

என்று கூறித் தெளிவுபடுத்துகின்றனர். மேலும் இதனைத் தோணிபுரத் தோன்றலார்,

"ஆயாதன சமயம்பல
அறியாத அந்நெறியின்
தாயானவன் உயிர்கட்கு
முன்தலையானவன்
மறைமுத்
தீயானவன் சிவன்எம்
இறை
செல்வத் திருவாரூர்
மேயானவன் உறையும்
இடம்
வீழிம் மிழலையே"

என்று அறிவித்துள்ளார். யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி' என்றார் தாயுமானவர்.

தத்தம் சமயத்தார் தத்தம் சமயப்பற்றுக் காரணமாகத் தத்தம் வழிபடு தெய்வங்களைப் புகழும் ஆற்றால் புரிசடைப் புண்ணியனைப் புறக்கணித்துப் புன்சொல் புகலுங்காலும் அன்னாது அறிவின்மைக்குப் புன்னகை புரிந்து அவர்தம் வெறுப்பு மொழிகளையும் ஏற்று அவர்கட்குத் தண்ணளி செய்யும் தகைமையாளன் சிவபரஞ்சுடர் என்னும் குறிப்புக்களை வாகீசப் பெருந்தகையார்,

"விரிவிலா அறிஞர்கள்
வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னாரேனும்
எம்பிராற் கேற்றதாகும்"

என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

இன்னோரன்ன அனுபவ மொழிகளால், எல்லாச் சமயங்கட்கும் முதல்வன் முக்கண் மூர்த்தி என்பதும். அம்முக்கண் மூர்த்தியினை முதன்மையாகச் சிறப்பு முறையில் கொண்டுள்ள சைவசமயமே எல்லாச் சமயங்கட்கும் தாயகமாய் இருப்பது என்பதும் தெளிவாகின்றன அன்றோ? இக்கருத்துக்கு அரண் செய்வனவாக உள்ளவை,

"அயர்வறச்சென் னியில்
வைத்து
ராசாங் கத்தில்
அமர்ந்தது வைதிக
சைவம்
அழகி தந்தோ"

என்றும்,

அந்தோஈ ததிசயம்இச்
சமயம் போல்இன்
றறிஞரெலாம் நடுவறிய
அணிமா ஆதி
வந்தாடித் திரிபவர்க்கும்
பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும்
மற்று மற்றும்
இந்த்ராதி போகநலம்
பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே
றில்லை இல்லை
சந்தான கற்பமம்போல்
அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே
தான்சன் மார்க்கம்"

என்றும், தவராசசிங்கமாம் தாயுமானவர் பாடிய வாக்குகளே என்க. இது நிற்க,

எங்கும் முக்கண் மூர்த்தியே இருந்து அன்பர்கட்கு அருள் புரிந்து வருவதை அப்பர் பெருமானார், "அங்கங்கே சிவமாகி நின்றார் தாமே" என்று விதந்து கூறுமாற்றால் விளங்குகிறது. இந்தச் சீரிய கருத்து உண்மையே அன்றி வெறும் புகழ்ச்சி அன்று. இதனை உலகம் எங்கும் சிவலிங்கங்கள் நிறைந்திருப்பது கொண்டு இந்த உண்மையினை உணர்ந்து கொள்ளலாம்.

கிரேக்கர்கட்குரிய ஒலிம்பஸ் மலையில் சியஸ் என்னும் பெயரிய தெய்வம் இருப்பதாக நூல்கள் கூறுகின்றன. அந்த சியஸ் என்பது சிவம் என்பது ஆராய்ச்சியாளரது துணிபு. அது சடைமுடியுடையதாய், முத்தலை வேல் கையிற் கொண்டதாய் உள்ளதாம். இந்தத் தோற்றம் சிவபரஞ்சுடர்க்கன்றி வேறு எந்த மூர்த்தத்திற்கும் இல்லாமை காண்க. "செஞ்சடை முடிச்சிவன்" என்றும் "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்" என்றும் தேவாரம் கூறுதல் காண்க. வைணவர்களும் சடைமுடி சிவனுக்கே உரியதாக, 'பிறைதங்கும் சடையான்' என்றே பேசியுள்ளனர்.

பாபிலோனில் 1200 சிவலிங்கங்களும், மெக்கா என்னும் இடத்தில் ஸகமக்கேஸ்வரர் என்னும் பெயருடன் ஒருலிங்கமும், பிரேசில் நகரில் பல லிங்கங்களும், கிளாலி கோவிலில் சுவர்ண கவசத்தால் ஆன லிங்கமும், வினியா, யகோதி, சித்கால, காபூர், பலக்புகார் முதலான இடங்களில் பல இலிங்கங்களும் இருப்பனவாக வரலாற்றுப் புலமை மிக்கவர்கள் புகல்கின்றனர்.

லிடியா நாட்டில் சமாதி ஒன்றன்மேல் ஒன்பது அடி குறுக்களவுள்ள இலிங்கம் அமர்த்தப்பட்டிருப்பதாக அறிய வருகிறது

மிகப் பழைய சிவாலயம் ஒன்று அண்மையில் அமெரிக்காவில் கொலராடோ ஆற்றங் கரையில் உள்ள பீடபூமியில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்பீடபூமி மற்றத் தரைப்பாகத்திலிருந்து பிரிந்த காலம் இலட்சக் கணக்கான ஆண்டுகளாகி இருக்கவேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. அங்குள்ள சிவாலயம் அரைச் சதுரமைல் சதுரமானது என்பதும், அது செங்குத்தான ஒரு மலையிலுள்ளது என்பதும், 1937ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் தேதியில் வெளிவந்த 'லண்டன் நியூஸ் ரெவியூ' என்னும் பத்திரிகை வாயிலாகத் தெரிய வருகிறது. அப்பத்திரிகையில்,

In the wild Mountainous State of Colorado, seventh largest in America scientist of the W. S. Museum of National History, three months ago announced discovery of a "Lost world". The focal point was Shiva's Grand Temple a half square mile of solid rock plateau isolated from the mainland by 9000 ft Canyons eroded by rivers some 200000 years ago" என்று எழுதப்பட்டிருக்கிறது.

- ஞானசம்பந்தம்

வித்துவான், திரு. து. கண்ணப்ப முதலியார் அவர்கள் P.O.L
பாலூர்

# சமூக வாழ்க்கை

3-ம் பக்கத் தொடர்ச்சி

அகற்சியடைய யாண்டும் பரந்து உலக மனைத்தினையுங் கதுவத் தக்கது. சுற்றத் தொடர்பு நிலைபெறுவதற்கு அன்பின்வழிவந்த ஈகை ஆதாரமாய் நின்றது பிறிதொன்று கொடுத்தற்கு வழியில்லாதோர் தாமும் இன்மொழியும் புன்னகையும் இயன்ற பணிவிடையுஞ் செய்தல் கூடுமாதலின் ஈகைக்குணத்துக்கு வறுமை ஒருபோதுந் தடையாகாது உள்ளத்திலே தியாக சிந்தனை உதிக்குமாயின் அதுவே போதுமானது. பிறர்க்குதவி செய்ய விரும்பிய தியாகி தான் கருதிய உதவியைச் செய்து நிறைவேற்றுவதற்கு வேண்டிய சௌகரியங்கள் தாமே வந்தெய்துவனவாம். தியாக சிந்தையோடு பிறர்க்குதவி செய்யுஞ் செயலே நிறைந்த இன்பத்தோடு கூடியதாயிருத்தலின் அதற்குப் பிறிதொரு கைம்மாறு வேண்டப்படுவதில்லை.

இனி ஒரு நகரத்திலோ ஒரு தேயத்திலோ ஒருங்கு கூடி வாழும் மாந்தர் பொருள் இன்பங்களை வளர்த்து தம்முள்ளே கலாம் விளையாது அறநெறி முறைப்படி வாழ்வதற்கு அவரை வழிப்படுத்துவான் ஒரு அரசன் இன்றியமையாதவனாகின்றான். அரசன் பிரைகளுதகுச் செய்யவேண்டிய கடமையையும் பிரைகள் அரசன்பாற் செலுத்த வேண்டிய கடமைகளையும் இவையிவையென இருசாராரும் அறிந்து நடப்பாராயின அரசியற் பொருட்பாற்றொடர்பு நன்கு நிலைபெறும். (க) கள்வரானும் உட்பகையானும் தீங்கு விளையாது பாதுகாத்தலும், (உ) கணவன், மனைவி, பெற்றோர், புதல்வர் என்றின்னோருக்கிடையிலுள்ள பொருளுரிமை ஒழுக்க நெறி இவற்றைவரையறை செய்து விதித்தலும், (ங) பொருளோடு இயைபுபட்ட ஆட்சி, விற்பனவு நன்கொடை இவற்றினியல்பை வரையறுத்துக் கூறுதலும், (ச) இருவர்கிடையே யுள்ள உடன்படிக்கையினியல்பை வரையறுத்துக் கூறுதலும், (ரு) நெறியிதுதவறிதுவென வகுத்துக் காட்டி அறமுறை நிறுத்தலும் அரசியலுக்குரிய அகக்கடமைகளாம். இவற்றோடு ஒன்றிநின்ற சிறப்பினவாகிய புறக்கடமைகளுஞ் சிலவுள. அவை யாவன:— 1 கிருஷி வர்த்தகம் என்னுமிவற்றை விருத்தி பண்ணுதல், அங்ஙனம் விருத்தி செய்தற்கு வேண்டிய நாணயம், நிறையிவற்றை யேற்படுத்தல், முறையறிந்து தீர்வை விதித்தல், கப்பற் போக்கு வரவுக்கு வேண்டிய சட்டங்களையேற்படுத்தல், 2 தொழிலாளரை நிலைப்படுத்துதல, 3 போக்கு வரவுக்கு வேண்டிய பாதை புகையிரதவீதி இவற்றை நிருமித்தல், 4 தந்தி தபாற் சௌகரியங்களை யேற்படுத்துதல், 5 நீர்க்குளாய், தெருவிளக்கு ஆகியவற்றையமைத்தல், 6 சுகாதாரத்துக்கு வேண்டுவன செய்தல், நோயுற்றோருக்குச் சிகிச்சை செய்வித்தற்கேற்ற வசதிகளையுண்டாக்கல், 7 கல்விச் சாலையேற்படுத்துதல். 8 வறுமையுற்றோரையும், வலிமையற்றோரையும் பாதுகாத்தல், 9 மரந்தரும் வனங்களைப் பாதுகாத்தல். 10 மதுபான நீக்கம் முதலியவற்றில் ஊக்கஞ் செலுத்துதல். இத்தகைய கடமைகளை அரசியலார் செய்து வருவாராயின் குடிகள் அவர்பாலன்பும் அச்சமும் பூண்டு அவர்வழி நிற்பதுமியல்பேயாம்.

அன்பின்றொடர்பு, சுற்றத் தொடர்பு, அரசியற் பொருட்பாற்றொடர்பு என்னும் இவற்றினியல்பை ஆராய்ந்தறிந்து நெறிதவறாது நிற்பவரே வாழ்க்கை நலனை யடைந்தோராவார்; இவர் செயலாலே சமூக மனைத்தும் நலனெய்தும். இத்தொடர்புகளை ஆராய்ந்தறிவுறுத்தும் நூல்களே நூல்களெனப்படுவன. பிற நூல்கள் விளையாட்டுநூலும் பொழுதுபோக்கு நூலுமாமேயன்றி உண்மை நூலெனப்டொ. பெருந்தகையவாய நூல்களுட் பெருந்தகையதாக விளங்குவது திருவள்ளுவநாயனார்உரைத்தருளிய முப்பானூல் - இது மூவகைத்தாய தொடர்பினியல்பனைத்தையும் விரிவாகக் கூறுவது. தமிழ்மொழிக்கு அருங்கலமாகிய இந்நாலினைத் தமிழரனைவரும் அமைவுறக் கற்று அதன் வழி நிற்பரேல் இம்மை மறுமைப் பயனையடைவார்களென்பது திண்ணம்.

[முத்தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் 'குமரன்' பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையின் சுருக்கம்.]

பாடசாலைகளுக்குரிய
**தினவரவு இடாபபு**
அழகாக அச்சிடப்பட்டுள்ளது
**விலை ரூபா 1-50**
அதிபர்
இந்துசாதனம்

**ஜீ. ஸீ. ஈ. இலக்கியம்**
திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்
அரும்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.
விலை சதம்: 50.
மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
காரைதீவு கிழக்கு சண்முகம்
கைம் பெண் சேதுப்பிள்ளை
வழக்காளி.

இல MB 1127

எதிராக

காரைதீவு வடக்கு கந்தப்பு சுப்பிரமணியம் -எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 1127 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1958ம் ஹூ தை மீ 25 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் முதலாம் காணியும் முற்பகல் பத்து மணி தொடக்கம் இரண்டாம் காணியும் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2005/25ம் ரூபா 1500-க்கு 28-7-56 தொடக்கம் 23-9-57 வரை 6 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 221-89 சதம்.

காணிகளின் விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவு மேற்கு வலந்தலைக் கோவிற்பற்று தங்கோடையிறை "தானியம்பிட்டி" பர நெ இல பத்து (10) எல்லை கிழக்கு சண்முகம்முருகேசுவுக்குரியவாதனம். வடக்கு சண்முகம் இராசையாவிற்கும் பங்காளருக்கு முரியவாதனம், மேற்கு கனகர் ஆறுமுகத்திற்குரியவாதனம் தெற்கு கந்தப்பு நமசிவாயத்திற் குரியவாதனம், கந்தப்பு கைம்பெண் இலட்சுமிக்குரிய சீவியவுரித்துப் பிறநீங்கலாக இதடங்கலும் இதன் பதிவு C 209/236.

2. ஷை காரைதீவு மேற்கு வலந்தலைக் கோவிற்பற்று "காஞ்சோறியப்புலம்" பர. நீ. இல. ஆறே முக்கால் ($6\frac{3}{4}$) செய் பயிர்வான் பயிர்களும் எல்லை கிழக்கு சங்கரப்பிள்ளை ஆறுமுகத்திற்குரியவாதனம், வடக்கு கந்தப்பு நமசிவாத்திற்குரிய வாதனம் மேற்கு அருணசலம் சுந்தரத்திற்கும் பங்காளருக்கு முரியவாதனம் தெற்கு இராமுப்பிள்ளை பெண் தங்கமுத்துவிற்குரிய வாதனம். வடக்கெல்லைக் காணிக்குப் போக்குவரவுசெய்ய மேற்கெல்லையருகால்விடப்பட்ட கையொழுங்கையும் கந்தப்பு கைம்பெண் இலட்சுமியின் சீவியவுருத்தும் பிறநீங்கலாக. இதடங்கலும் இதன் பதிவு C 209/237.

காரைநகர்; 1957ம் ஹூ கார்த்திகை மீ 27ம் திகதி

வை ஏரம்பமூர்த்தி,
கொம்மினஷனர்,
M, 187 20-12-57



## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

நெடுந்தீவு ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை வழக்காளி

இல. MB 1283,

எதிராக.

1. நெடுந்தீவு கிழக்கு நாகலிங்கம் தருமலிங்கம்.

2. ஷையூர் பெண் பொன்னம்மா எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB, 1283ம் இலக்க வழக்கில், எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1958 ம் ஹூ தை மீ 18ம் திகதி கனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் முதலாம் காணியும் பிற்பகல் மூன்று மணிதொடக்கம் இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:-முதல்வட்டி ரூபா. 3225/ம் ரூபா 2500/க்கு 19-10-1956 தொடக்கம் 17-1-57 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுக் செலவு ரூபா 237/73 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி நெடுந்தீவுக் கோயிற்பற்று நெடுந்திவு கிழக்கிறை "மங்கிவளவு சீமான்" பர நீ. இல. இருபது (20) கல்வீடும் பயிர்வகைகளும் கிணறும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு ஒழுங்கை மேற்கு ஆறுமுகம் நாகலிங்கத்திற்குரியவாதனம் தெற்கு கீழே சொல்லப்படும் இரண்டாம் ஆதனம். இதன் பதிவு C 232/214.

2. ஷை நெடுந்திவு கிழக்கிறை "மங்கிவளவு" பர. நீ. இல. நாற்பது (40) எல்லை கிழக்கு அம்பலவாணர் இளையதம்பிக்கும் பங்காளருக்கு முரியவாதனம் வடக்கு மேலே சொல்லப்பட்ட முதலாம் ஆதனம் தெற்கு நாகலிங்கம் பெண் பொன்னம்மாவிற்கும் பங்காளருக்குமுரியவாதனம் மேற்கு நாகமுத்து கதிரவேலுவிற்கும் பங்காளருக்குமுரியவாதனம். இதடங்கலிற் சொரியலாயரைவாசி. இதன் பதிவு C232/215.

காரைநகர்; 1957ம் ஹூ கார்த்திகைமீ 23ம் திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
M 188, 20-12-57,


அரசியல் அலை

# எல்லோருக்கும் தொல்லைகொடுக்கும் ஏகபோக ஆட்சி

## கடும்பசியுற்றவன் கெடுமதிபோல அடங்காத்தன்மை!

**பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்** என்ற முதுமொழி முற்றிலும் உண்மை என்பதை அரசியலில் மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிதான் நன்கு புலப்படுத்துகின்றது. பொருளாதார வறுமையுற்றுக் கடும்பசி கொண்ட பண்டாரநாயக ஆட்சியிலே அகப்பட்டதெல்லாவற்றையும் பசி ஆற்றப் பயன்படுத்தும் நிலை வந்துவிட்டது. பெரும்பசிகொண்டு மிதமிஞ்சி உண்டவனுக்கு வரும் நோய் யாதென்பது உலகமறிந்ததே.

நெல்விளையும் காணிகளை எல்லாம் அரசாட்சிப் பொறுப்பிற் கொண்டுவரத் திட்டமிட்டுக்கொண்டு வந்து நிற்கின்றார் ஓர் அமைச்சர். ஏழைக்கமக்காரனுக்கு உதவி செய்கிறேன் என்று சொல்லிவிட்டு அன்னவரின் கூழைப் பறித்துண்ண எண்ணியிருக்கின்றார் இந்த மகாசன மந்திரியார்.

'சர்வர் தேசியமயம்' என்ற பொதுவுடைமைச் சுலோகத்தை மனனம் செய்துவிட்டு அந்தப் புதுவுடைமைக்குப் பொருத்தமில்லாத ஈழதேசத்திலும், கண்ட பாவனையிற் கொண்டை முடிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டுநிற்கின்றது பண்டாரநாயக ஆட்சி.

வழக்கறிஞர்களிடமிருந்து நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் வருமானவரிபெறுவதற்கு வழிதேடும் ஒரு புதுத் திட்டம் உருவாகிறதாம். இந்த வரிபெறும் வழி ஈற்றில் யாரைத்தாக்கும் என்பதை மகாசன நீதிமந்திரியார் அறிந்தும் மகாசனத்தின் பொருளாதார இரத்தத்தை உறிஞ்சுவதற்குத் துணிந்துவிட்டார். காரணம், பொருளாதாரக் கடும்பசியே.

### நேற்காணித் திட்டம் நிறைவேறியது

அறுபத்தொரு அங்கத்தவர்கள் சாதகமாகவும் ஏழு அங்கத்தவர்கள் பாதகமாகவும் வாக்களிக்கப் பெற்று நெற்காணித் திட்டம் நிறைவேறியது. காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. S. J. V. செல்வநாயகமும் சமஷ்டிக் கட்சி ஏனைய அங்கத்தவர்களும் பலமாகத் திட்டத்தைக் கண்டித்தார்கள். இதனைக் கண்டிப்பதற்கு இரு காரணங்கள் உளவெனத் திரு. செல்வநாயகமவர்கள் கூறினார்கள். ஒன்று: இத்திட்டம் இந்த நாட்டினைப் 'பொது உடைமை' வழியிற் செலுத்துகின்றது. மற்றது இதிற் காணப்படும் வகுப்புவாதக் கொள்கையாகும்.

## கொழும்புநகரசபை...

2-ம் பக்கத் தொடர்ச்சி

பிற் சிந்திக்கவேண்டியவையாகும்.

முதல் மந்திரி ஸ்ரீபண்டாரநாயகவும் உள்நாட்டு அரசாங்க மந்திரி ஸ்ரீ ஜயவீரகுறுப்புவும் உள்நாட்டு அரசாங்க அலுவல்களில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்களாகையால் பொதுவாக எல்லா உள்நாட்டு அரசாங்க சபைகளின் தொடர்பிலும் விசேடமாகக் கொழும்புமா நகரசபைத் தொடர்பிலும் கவனமாகவும் பேணமாகவும் செயலாற்றுவார்களென்று மக்கள் எதிர் பார்க்கின்றனர். தெல்லிமா நகரில் அணிமையில் நடந்த சமராச்சிய பாராளுமன்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஸ்ரீ பண்டாரநாயக வெளியிட்ட கருத்துக்களில்ஒன்று பின்வருமாறு:-

"சனநாயக முறைகளாலேயே சனநாயகம் நிலைபெறுதல் ஆகும் அல்லது அது ஒருபோதும் நிலைக்க மாட்டாது'.

எங்கள் நாட்டுக் கருமங்களைக் கையாளும்பொழுது மேலே காணவந்த சிறந்த கருத்தை எங்கள் முதல் மந்திரியும் உள்நாட்டு அரசாங்கப் பகுதி மந்திரியும் மனத்தில்வைத்திருப்பதை, பொதுவாக இலங்கை மக்கள் யாவரும் விரும்புவார்கள்.

கொழும்பு
திரு. சு. சிவசுப்பிரமணியம்


ஆசிரியர்க்கும்
ஆசிரிய மாணவர்க்கும் உரிய
அரிய நூல்!

**படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்**

சைவத் திருவாளர்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
B. A. அவர்கள் இயற்றியது

புதுக்கிய இரண்டாம்பதிப்பு.
விலை: ரூபா 3-00

அதிபர்
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.


## திருவெம்பாவையும் திருவாதவூரடிகள் புராணப் படிப்பும்

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் 27-12-57 வெள்ளிக்கிழமை தொடக்கம் 5-1-58 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8 மணி யளவில் திருவெம்பாவை யோதுதலும் திருவாதவூரடிகள் புராணப் படிப்பும் நடைபெறும்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக,

மு. மயில்வாகனம்,
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 19-12-57.
M 190 20-12-


## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

சுளிபுரம் சின்னப்பெடியர்
கணபதி
இல, M. B. 1196
வழக்காளி
எதிராக
முருகேசு கந்தையா வண்ணார்பண்ணை தற்சமயம் தொல்புரம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1196 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் காணி 1958 ஹூ தை மீ 25 உ சனிக்கிழமை பிற்பகல் நாலு மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 1590 ம் இன்னும் ரூபா 1000-க்கு இதற்குத் தீர்வைத் 30-8-51 திகதி தொடக்கம் 100 க்கு 10 வீத வட்டியையும் பின் முதலுக்கும் வட்டிக்கும் 15 11.56 தொடக்கம் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 173-50 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை இறை தொல்புரம் மன்னு தோட்டம் நிலைப்பரப்பு 12-ம் $8\frac{1}{2}$ குழியும் வான்பயிர் செய்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கு மாரிமுத்தர் அப்பருக்கும் பங்காளருக்கும்வடக்குமாரிமுத்து அரியகுட்டிக்கும் கணபதிப்பிள்ளை முருகேசுவுக்கும் தற்சமயம் முருகேசு கந்தையா மேற்கு ரோட்டு தெற்கு மூளாய் முத்துக்குமாரசுவாமி கோயில் ஆதனமும் மாரிமுத்தர் அப்பருக்கும் பங்காளருக்கும் இது அடங்கலிற் சொரியலாக மூன்றிலொரு பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

சி. சே. மாரிமுத்து
கொம்மிசனர்.

விதானை வளவு
சித்தங்கேணி
16-12-57
M, 186 20-12-57,


## ஸ்ரீ சிவகுருநாதர் நினைவுநாள்

—0—

தமிழ்மக்களின் நலனுக்காகப் பொதுவாகவும் தமிழ்மொழி சைவம் ஆகியவற்றுக்குச் சிறப்பாகவும் பெருந்தொண்டாற்றி சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் நகரசபை ஆகியவற்றின் முன்னணியில் நின்று பெருஞ்சேவை செய்து மறைந்த பெரியார் திரு இ. சிவகுருநாதர் அவர்களின் நினைவுநாள் சைவபரிபாலனசபை ஆதரவில் நாவலர் மண்டபத்தில் 18-12-57 புதன்கிழமை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

முற்பகல் சிவபூசை சமாராதனை ஆகியவற்றோடு பிற்பகல் விசேஷ பூசையும் மிகச் சிறப்பாகச்செய்யப்பெற்றன. அன்றிரவு இசைப்புலவர் ஸ்ரீ சி. செல்லத்துரை அவர்கள் சிறந்த இசைவிருந்தொன்றை யுதவிப் பக்தி ததும்பும் பாடல்களால் யாவரையும் பரவசமடையச் செய்தார்.


## அந்தியகால அறிவித்தல்

—0—

**யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்கம் லிமிற்ரெட்**
இல: 4, கண்டிரோட், சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
பதிவு இல. M. 110

இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் அங்கத்தவர் தேகவியோகமடைந்தமையால் அன்னவர்க்காகச் செலுத்தவேண்டிய நன்கொடைப் பணத்தைத் தேகவியோகமடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குட் செலுத்தி விடவும், தவறின் பிரமாணம் 2 (2) ன் படி உரிமையை யிழக்கவேண்டி வரும்.

| காலகதியடைந்தவர் இலக். | பெயர் | விலாசம் | திகதி |
|---|---|---|---|
| 2350 | பொன்னம்பலம் நடராசா | ஸ்ரான்லிரோட் யாழ்ப்பாணம் | 15-12-57 |
| 1100 | மு. வியாளாச்சி | கந்தர்மடம் | 16-12-57 |

மேலும் கீழ்க்காணும் தேகவியோகமடைந்த அங்கத்தவர்களுக்குக் கீழ்க்காணும் விபரப்படி மரணசேவைப் பணமும் சந்தாப் பணமும் வழங்கப்பட்டன.

| அங் இலக் | பெயர் | விலாசம் | வளங்கப்பட்ட நன்கொடை | சந்தா |
|---|---|---|---|---|
| 2192 | யோவார்மரியாம்பிள்ளை | திருநெல்வேலி | ரூபா 1475-25 | =12-50 |
| 225 | நீக்கிலாப்பிள்ளை பொன்னம்மா | ஆஸ்பத்திரிரோட் | 1475-25 | 44-00 |

இங்ஙனம்
த. இராசரத்தினம்
கௌரவகாரியதரிசி, 18-12-57
M 189 20-12-57


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ௵ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை

Std 14 சிருப்பர்


## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவுதினம்

௸ தினம் கார்த்திகை 27 ௳ (12-12-57) வியாழக்கிழமை மாலை தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையாரால் காசிவிநாயகராலயமண்டபத்தில் சபைத் தலைவர் பிரம்மஸ்ரீ M. சிவகடாக்ஷக் குருக்கள் தலைமையில் செவ்வனே கொண்டாடப்பட்டது

அன்றுபிற்பகல்ஸ்ரீகாசி விநாயகப்பெருமானுக்கு விசேட ஆராதனைகள் நடைபெற்றன. அதன்பின் நாவலர்பெருமானுக்கு விசேட வழிபாடும், கூட்டுப் பிரார்த்தனையும் மாணவர்களால் செய்யப்பெற்றதும், தலைவர் பேசுகையில் நாவலர் பெருமானின் தொண்டினையும் இலட்சியங்களையும் எடுத்து விளக்கினர். திரு. M. S. சிதம்பரப்பிள்ளையால் எழுதப்பெற்ற "நாவலர் பெருமான்' என்னும் கட்டுரை செல்வி மு. இராணி மலரால்வாசிக்கப்பட்டதும் மாணவ மாணவிகளின் தேவார — உபந்நியாசங்கள் நடைபெற்றன. கூட்டம் தேவார பாராயணத்துடன் 6 மணிக்கு இனிது நிறைவுற்றது.

# நாவலர் ஞாபகப் போட்டிப் பரிசுகள்

கொழும்புவிவேகானந்த சபையாரால் நடத்தப்பெற்றநாவலர்ஞாபகார்த்த அகிலஇலங்கைப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் விபரம் வருமாறு:

### பேச்சுப் போட்டி

மேற்பிரிவு முதற் பரிசு (தங்கப்பதக்கம்) மாதகல், சென் யோசப் ஆங்கிலப் பாடசாலையைச் சேர்ந்த செல்வன் வி. சுப்பிரமணியம்.

இரண்டாம் பரிசு: சி. கண்ணன், கதிரேசன் கல்லூரி கொழும்பு.

பேச்சுப்போட்டி கீழ்ப் பிரிவு முதற்பரிசு: வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மாணவி செல்வி சு. ஜெயகௌரி.

இரண்டாம்பரிசு: செல்வன் இ. இராசகுமார், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை.

### கட்டுரைப் போட்டி

கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மாணவன் செல்வன் இ. பரமேஸ்வரன்.

இரண்டாம் பரிசு: செ. இராசையா, புங்குடுதீவு ஸ்ரீ. சுப்பிரமணிய வித்தியாசாலை.

மூன்றாம் பரிசு: கோ. இரத்தினம்பாள், கொழும்பு விவேகானந்த வித்தியாலயம்.

### ஆறுதல் பரிசுகள்

பேச்சுப் போட்டியிற் கலந்து கொண்ட கீழ்க்காணும் மணவர்கள் ஆறுதல் பரிசில்களைப் பெறுகின்றார்கள்.

கீழ்ப்பிரிவு; சு. வேதவதி, க. மனோன்மணி, நீர்கொழும்பு விவேகானந்த வித்தியாலயம், சோ. இந்திராதேவி திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, ச. பஞ்சலிங்கம் சிவியாதெரு ஆனந்த வித்தியாசாலை, அ. விசுவநாதன், பெ. சக்தி கண்டி இந்து கனிஷ்ட பாடசாலை, ஏ. சுகிர்தலோஜினி, வெள்ளவத்தை சைவமங்கையர் கழகம்.

மேற்பிரிவு: சோ. தேவநாயகி திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, த. சண்முகம், அ. கந்தப்பன் கொழும்பு விவேகானந்த வித்தியாலயம், செ. கமலம், ந. பரமசிவம் கண்டி இந்து கனிஷ்டபாடசாலை, இ. சிவானந்தன் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, இ. நித்தியானந்தம் சித்தங்கேணி,

# விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமான்

## இடையூறு நீக்கி இன்பந் தருவார்

### அடியிணை தொழுது அருள்நனிபெறுவோம்

ஸ்ரீ வ. குகசர்மா

"எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்" என்பது பெரியோர்வாக்கு. ஒருவரையோ ஒரு உருவத்தையோ அல்லது ஒருவரின் ஓவிய உருவையோ பார்க்கும்போது நாம் முகப்பொலிவையே முதற் பார்க்கிறோம். முகத்திலிருந்துதான் கோபம், மகிழ்ச்சி, கவலை முதலிய பலவித உணர்ச்சிகளைப் பார்த்துக் கொள்கிறோம். இதனாலே வள்ளுவரும் 'அடுத்தது காட்டும் பளிங்காக" முகத்தை உவமித்தார். அறுமுகப்பெருமானைத் துதித்த கச்சியப்பரும் முதலிலே "மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி" என அறுமுகப் பெருமானுடைய திருவதனங்களையும் அவற்றிலிருந்து பொழியும் அருளையும் போற்றினர்.

விநாயகப் பெருமானின் முகம் யானைமுகம். அது பிரணவ மந்திர ரூபமாயுள்ளது. "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என ஔவையாரும் கூறினர். யானைக்கு இயல்பாக உடையது இரண்டு கொம்புகள். 'ஒருமதிமுறித்து ஆண்டு இருகவுட்செவிய ஏந்துகோட்டு" எனக் கல்லாடர் ஒரு இடத்தில் எடுத்துப் பேசுகிறார். ஆனல் விநாயகராகிய வேழத்திற்கு ஒரு மருப்புத்தான் உண்டு. மற்றக் கொம்பை உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கையிலே முறித்து வைத்திருக்கிறார். ஆகையால் அவர் "ஒருகொம்பின் யானைமுக உத்தமனர்" என்று அழைக்கப்படுகிறார். அவர் ஒரு கொம்பு விளங்கும் அழகை "பெருமலைச் சென்னியில் சிறுமதி கிடந்தென கண் அருள் நிறைந்த கவின் பெறு மெயிற்ற" என எடுத்துக் காட்டுகிறார் கல்லாடர்.

விநாயகப் பெருமானின் முக அழகை அவர் வெகு நுணுக்கமாக ஆராய்கிறார். முடி, செவி, துதிக்கரம், கண் என்றிவ்வாருகப் பலவிதமாக எடுத்து ஆராய்கிறார். இப்புலவர் மாத்திரமல்ல வேறு புலவரும் விநாயகப் பெருமானின் முகத்தின் அழகையே தனியாக வர்ணித்துப் பாடியுள்ளார். "உச்சியின் மகுடமின்ன ஒளிதர நுதலினேடை வச்சிர மருப்பினொற்றை மணி கொள்கிம்புரிவயங்க மெய்ச் செவிக் கவரிதூங்க வேழமாமுகங்கொண்டுற்ற" என்றார் கச்சியப்பர். விநாயகப் பெருமானின் நிறம் சிவப்பு. "துப்பார் திருமேனித் தும்பிக்கையான்' என்றார் பிறரும். அவரது கன்னங்களில் இருந்து மதநீர் பாய்கிறது. அதிலே வண்டுகள் மொய்க்கும். மதநீரில் வண்டு மொய்த்தலை "ஊற்றெடுத்து வண்டோலிடும் மும்மதம்"எனப் பிறரும் எடுத்துக் காட்டியுள்ளார்கள். விநாயகப் பெருமானது சடையில் பிறைச்சந்திரன் தங்கியிருக்கும். ஆகவே பிறையணிந்திருக்கும் சிரசினையும் வதனத்தின் செவ்விய நிறத்தையும் நூலாசிரியர் பிறைதழுவிய பொன் மலைக்கு ஒப்பிடுகிறார். மதசலத்தை அருவிநீருக்கும், மதசலத்திற் கிடந்து புரளும் கரிய நிறமுள்ள வண்டுகளை அருவியிற் புரளும் கருநிற மணிகளுக்கும் ஒப்பிடுகிறார். இக்காட்சியைப் பின்வரும் அடிகளிற் பார்க்கின்றோம். "திங்கள்முடிபொறுத்த பொன் மலை அருவி கருமணி கொழித்த தோற்றம்போல, இருகவில் கவிழ்த்த மதநதி உவட்டின் வண்டினம் புரளும் வயங்கு புகர்முகத்த"

விநாயகப் பெருமானது திருச்செவிகள் அசைந்து கொண்டிருமகின்றன. சிவபெருமான் நடனம் செய்யும் இடமாகிய ஊழித்தீயும் முனிவர்களின் விழியில் உள்ள கோபாக்கினியும் சாபமாகிய நெருப்பும் தென் கீழ்த்திசையோனகிய அக்கினியினது வல்லமையும் ஆகிய நெருப்புக்கள் எல்லை கடந்து போகாமல் செவியசைவினின்றும் புறப்படும் சிறுகாற்றால் மட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறார். விநாயகப் பெருமானது [illegible] நாம் பார்க்கிறோம். மனத்தில் உள்ள எண்ணங்களை முடித்தலும் அளவற்ற துயரத்தை நீக்குதலும் அவரது தன்மை என்பதை "குண்டு நீர் உடுத்த நெடுநீர்ப் பரப்பும் எண்ணு இலக்கமொடு நண்ணிடு துயரமும் அளந்து கொடு முடித்தல் கின் கடனதலின்" என்ற வரிகள்மூலம் தெளிய வைக்கிறார். பிறவியானது காற்றாடி போன்றும் ஓயாது சுற்றிச் செல்லும் தேர்ச்சில்லைப்போன்றும் ஊஞ்சல் பேய்த்தேர் என்பவற்றின் தன்மைகளையும் கொண்டது.

இவ்வாருன பிறவியில் ஏற்படும் கலகங்களையும் நாங்கள் முன்னேற எடுக்கும் நல்ல செயல்களுக்கு வரும் இடையூறுகளையும் விநாயகப்பெருமான் தம் அருள்பொழி கடைக்கண் தாங்கி" இல்லாது செய்வர். இது யாம் அவரை வணங்குவதனல் ஏறபடும் பலனாகும்.

## தெய்வப் புலவர்காட்டும் இல்வாழ்க்கைப் பண்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

மித நடையில்லையெனக் காட்டிய பத்தாம் குறட்பாவிலே இல்வாழ்க்கையின் அணிகலன் கூறப்பட்டுள்ளது. ஒருவர்க்கு நன்மையென்று அறிந்தோர் சொல்லுவது மனையாளது நற்குண நற்செய்கைகளையேயாம். அவை தமக்கு நல்ல அணிகலம் என்று சொல்வது நல்ல புதல்வரைப் பெறுதலையென்கிறார்.

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார் முன்
னேறுபோற் பீடு நடை"
"மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு"

என்பன அப்பாடல்கள்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும்திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால்20-12-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org